முதன்மை சார்பு நீதிமன்றம். விழுப்புரம்.

OS.No.239/2024

செந்தில் (எ) செந்தில்குமார் த/பெ. ராமையன் பி.சா.3

இன்று (20.02.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது. சத்தியமாகச் சொல்கிறேன்.

குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். தாவா அடமானச்சொத்து எனக்கும், எனது சகோதரர் 1ம் பிரதிவாதிக்கும் பாத்தியமானது என்றால் சரிதான். நாங்கள் இருவரும் விவசாயம் செய்கிறோம் மற்றும் துணி வியாபாரமும் செய்கிறோம் என்றால் சரிதான். அடமானப்பத்திரத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் நாங்கள் கையெழுத்திட்டோம் என்றால் சரிதான். சார்பதிவாளர் பதிவு செய்வதற்கு முன்பாக அடமானப்பத்திரம் பற்றி எங்களிடம் தெரிவித்து நாங்கள் சம்மதம் தெரிவித்தபிறகுதான் பதிவு செய்தார் என்றால் சரிதான். அந்த அடமானப்பத்திரத்தில் அசல் கடன் தொகை ரூ.8 லட்சம் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 4 லட்சம் பெற்றிருந்ததாக சொல்லும்போது அதை கடன் தொகை ரூ.8 லட்சம் என எழுதப்பட்டுள்ளதை ஆட்சேபனை செய்தீர்களா என்றால் ரத்து செய்து கொடுக்கிறேன் என்று சொன்னதால் நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. வாதி சத்தியா எனது நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். கடந்த 10 ஆண்டு காலமாக எங்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றால் இந்த வழக்கு கடன் தவிர வேறு கடன் வாங்கியிருக்கிறேனா என்றால் இந்த வழக்கு கடன் தவிர வேறு எதுவும் வாங்கவில்லை. நான் வழக்கு கடனுக்காக வட்டி செலுத்தியுள்ளதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த கடன் பத்திரம் நான் எழுதிக்கொடுத்தபோது வாதியின் கணவர் வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். திருவண்ணாமலையில் உள்ள சொத்தை விற்பதற்கு பவர் பத்திரம் யார் பெயரில் எழுதிக்கொடுத்தோம் என்றால் பாபு என்பவர் பெயரில் எழுதிக்கொடுத்தோம். நாங்கள் பவர் கொடுத்த சொத்து விற்கப்பட்டுவிட்டதா என்றால் பவர் கொடுத்த இரண்டு நாட்களிலேயே பாபு என்பவர் குமார் என்பவருக்கு விற்றுவிட்டார். எவ்வளவு தொகைக்கு எந்த தேதியில் விற்றார் என்று சொல்லமுடியுமா என்றால் குறிப்பாக என்னால் சொல்லமுடியாது. அந்த விற்பனை பற்றி எனக்கு எப்போது தெரிந்தது என்றால் நாங்கள் பவர் கொடுத்த 7, 8 மாதம் கழித்து நாங்கள் வில்லங்கம் பார்த்தபோதுதான் அந்த விற்பனை பற்றி எனக்கு தெரிந்தது. விற்பனையை பற்றி தெரிந்தபிறகு பவர் எழுதிக்கொடுத்த பாபு என்பவரிடம் விற்பனை தொகையை கேட்டீர்களா என்றால் போன்மூலம் கேட்டோம் அவர் போனை எடுக்கவில்லை. அதனால் கோபி என்பவரிடம் எங்களிடம் வட்டியும வாங்கியிருக்கிறீர்கள்

சொத்தையும் விற்றுள்ளீாகள் என்று கேட்டோம். அப்படிதான் செய்வோம் என்ன செய்வீாகள் என்று சொல்லிவிட்டார்கள். வாதியின் கணவர் கோபி என்பவர் என் மீதும் என் அண்ணன் மீதும் தாக்கல் செய்த காசோலை மோசடி வழக்கில் நாங்கள் தண்டனை பெற்று தற்போது மேல்முறையீடு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கு தீர்ப்புகள் பி.த.சா.ஆ.15 மற்றும் 16 இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாகவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.A. Tamilselvan, M.L.,

Principal Subordinate Judge,

Villupuram.